பிஸ்மில்லாஹிர் றகுமானிர் றஹீம்.

இஃது

பீர்முகம்மது சாகிபவர்கள் அருளிச்செய்த

# ஆனந்தக்களிப்பு.

---

இஃது

சென்னை-இட்டா

## பார்த்தசாரதி நாயுடு & சன்ஸ்

அவர்களால்

---

மதுரை

மீனாக்ஷி விலாஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1929

பிஸ்மில்லாஹிர் றகுமானிற் றஹீம்.

# ஆனந்தக்களிப்பு.

தீன்தீன் முஹம்மது தீனே—எங்கள்
தீனெங்கள் தீனெங்கள் தீனெங்கள் தீனே
தீன்தீன் முஹம்மது தீனே.

தீனபி யன்ன ருருவாய்த்—திசை
ஆயிரத் தெட்டும் ஜபறூத்தி லாடித்
தாணொளி தான்கண்டு கூவ—இறை
தானவ னுசையால் நோக்கியே பார்க்க
ஆன புகழிறை யாசை—அந்த
அன்னத்தின் மீதி லணுப்போற் றரிக்கத்
தானே சுடராய் வழிந்து—கடற்
றன்னிற் றரித்தானைக் கண்டுகொண்டேனே (தீன்)

தன்னுசை யால்வந்த நாதம்—அவன்
றானே கடலுாபி ரோதிய வேதம்
அன்ன தெவையும் படைத்து—வகை
யாவு முருவுக் குயிராச் சமைத்துப்
பின்னு லேவந்து பிறக்கப்—பல
கோல மெடுக்கப் பிரபலஞ் செய்து
மின்னிய மங்குல முன்ன—இந்த
மேதினி நிறைந்தானைக்கண்டுகொண்டேனே (தீன்)

வானத்தின் மேகம் பொழிய—இந்த
வையகத் தானிய மெங்கும் நெளிய
ஊணினுன் மாதா பிதாவும்—அவ
னுதிரமே நாதமா யோசை முழங்கி
ஆணெடு பெண்ணு மிணங்கி—வந்த
வாசையி னவனெளி வாசந் துலங்கித்
தானத்தில் வந்து தரித்தே—உருத்
தானெடுத் தானையான் கண்டுகொண்டேனே (தி

அந்தக் கருவிந்து நாதம்—அதில்
அன்னை யுதிரமுங் கூடின சூதம்
அந்தக் கருவைந்து பூதம்—அது
ஐந்தெழுத் தாகுமே யோதிய வேதம்
விந்துக்குள் ளேதழல் நீதம்—அது
வீசும் புகையிலே யோடுஞ் சுவாசம்
அந்தக் குதிரைமே லேறும்—நம்ம
ளாதியை நன்ருகக் கண்டுகொண்டேனே (தி

உச்சித மாளிகை கட்டி—அதில்
உறுப்புக ளாயிரத் தெட்டையு மொட்டி
வச்சிரத் தால்வளை பூட்டி—வளை
சரியாமல் நரம்பெல்லாங் கயிருகக் கட்டி
மச்சுவீட் டுலகிற் பிறந்து—கொலு
மண்ட பத்துக்குள் ளேதாறு யிருந்தே
வைச்சுக் கையிற்சூட்ச மாட்டும்—நம்மை
வகுத்த குத்தாவையான் கண்டுகொண்டேனே(

கண்டதுங் கேட்டது மல்ல—அங்குக்
கருதி முடிந்த தலங்களு மல்ல
அண்டமும் பிண்டமு மல்ல—நல்ல
அகார வுகார சிகாரமு மல்ல
மண்டல மூன்றுக்கு மெல்ல—மறை
வாக நின்றிடும் வாசியு மல்ல
அன்றாதி யெங்கு நிறைந்து—நம்மை
ஆளும் றஹ்மானைக் கண்டுகொண் டேனே (தீன்)

கண்டதுங் கேட்டதுந் தானே—அங்குக்
கருதி முடிந்த தலங்களுந் தானே
அண்டமும் பிண்டமுந் தானே—நல்ல
அகார வுகார சிகாரமுந் தானே
மண்டல மூன்ற துந் தானே—மறை
வாக நின்றிடும் வாசியுந் தானே
அன்றாதி யெங்கு நிறைந்து—நம்மை
ஆளும் றஹ்மானைக் கண்டுகொண்டேனே (தீன்)

ஊத்தைச் சடலம் படைத்து—உலை
யாமலே யுப்புக் கடலைப் புகட்டி
வார்த்தைப் பசப்பிட்டு வைத்து—வகை
யாகவே யொன்பது வாசலு மிட்டு
ஆத்தும மென்றும்பேர் வைத்து—ஐந்து
பேரையு மொன்றாக வாடவும் வைத்துக்
காற்றைப் பிடித்தே யடைத்தே—ஆர்க்குங்
காணாமல் நின்றானைக் கண்டுகொண்டேனே (தீன்)

ஓதிய வோங்காரக் கோட்டை—யதி
லொன்பது வீதி யொழுங்கான தோட்டஞ்
சாதிக் குதிரைதான் வேகஞ்—சவு
தாரி மேற்கொண்டு நடத்திறா ணீதம்
வீதிக்கு வீதி குதிரை—விட்டு
வேடிக்கை யாகப் பரியை நிறுத்திப்
பாதமில் லாப்பரி யேறும்—நம்மைப்
படைத்தபிரானையான்கண்டுகொண்டேனே(தீன்)

கொள்ளைக் குதிரைகள் கோடி—அவன்
கோட்டை யழிக்க வருகுமே யோடி
வெள்ளைக் குதிரைமே லேறி—வீதி
தப்பா மற்சுற்றிப் பரியை நிறுத்திக்
கள்ளனைக் காவலாய் வைத்துத்—தானும்
கள்ளனுக் குள்ளே கலந்தே யிருந்து
உள்ளுநற்றுக் கோட்டையை யாளும்—நமக்
குள்ள பிரானையான் கண்டுகொண்டேனே (தீன்

உச்சிக்கு நேரே கிழக்கே—நம்ம
ளூருக்கு மேலே பெருவெளி தன்னிற்
பச்சைப்புறா வந்து மேயும்—அதைப்
பாங்குடன் மெல்லப் பழகிப் பிடித்துக்
கச்சைக் கயிற்றாலே கட்டிக்—கவி
மாவுடன் தேனைக் கலந்து புகட்டி
அச்சமில் லாக்கூட்டி லடைத்து—நம்ம
ளாதியை நன்றாகக் கண்டுகொண்டேனே (தீன்

உள்ளக் கடலுக்கு மேலே—அதி
லோங்காரமொன் றீமான் வட்டத்துக் குள்ளே
வெள்ளைப்பு ருவந்து மேயும்—அதை
மெல்லப் பிடித்து விதனப்ப டாமல்
கள்ளக் கயிற்றாலே கட்டிக்—கலி
மாவெழுத் தாலே கரைத்துப் புகட்டி
அல்லா திருக்கூட்டி னின்ற—நம்ம
னாதியை நன்றாகக் கண்டுகொண் டேனே (தீன்)

இல்லென் றெழுத்ததைப் பற்றி—இரு
வாசலைப் பூட்டி யடைத்துப் பிடித்துக்
கொல்லன் றுருத்திகொண் டூதி—நல்ல
கோலமாய் மூலக் குகையை யெழுப்பி
வில்லின்மேல் நாணம்பை யேற்றி—வெகு
வேகமா யொன்பது வாச லடைத்து
அல்ஹம்தி லொன்றாகி நின்ற—நம்ம
னாதியை நன்றாகக் கண்டுகொண் டேனே (தீன்)

கோலமா மூலக் குகையில்—பல
கோடிசெய் விந்தைக் கடலுக்கு மேலே
மேலொளி வாலைந்து கோட்டை—நடு
வோங்கார மொன் றீமான் வட்டத்துக் குள்ளே
நீலமாய் நின்றதை விட்டு—அதை
நீங்காத பச்சைநி றத்தையும் விட்டுச்
சீலமாய் நின்ற தெளிவைத்—திற
மாக குதாவையான் கண்டுகொண் டேனே(தீன்)

ஒன்றுக்கு ளைவர் பிறந்து—இந்த
உலகத்தையாண்டே யிருந்தேயிறந்து
ஒன்றையு நால்வ ரிழந்து—அந்த
வொன்றையே நால்வருங் கொளுவிற்சிறந்து
பண்டுள்ள நீதஞ் செலுத்திப்—பா
மைந்துமப் போதங்கொண் ருக நிறுத்தி
அன்று மின்று மென்று முள்ள—நம்ம
ளாதியை நன்ருகக் கண்டுகொண் டேனே (தி

நூறுநூ ருயிரங் கோடி—காலம்
அறிவெல்லா மானந்தக் களிப்பாகப் பாடிப்
பாரெல்லாந் தீனவ ரறிய—என்றன்
வாக்கு மனதுடன் வையகர்க் குரைத்தேன்
பாருள்ள தீன்குலத் தோர்க்கு—இதை
பாரக் கடலைக் கடுகினைப் போலே
பீரு முஹம்மது சொஞ்சொல்—மிகப்
பிரியமா யுரைத்திட்டேன் ஆமீன் ஆமீன் (தி

ஆனந்தக்களிப்பு.
முற்றிற்று.

# இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| முகையதீன்மாலை 5 முனாஜாத்து சேர்ந்தது | 0 | 8 | 0 |
| நான்குபக்கிரியென்னும் சார்தர்வேஷ் கதை | 0 | 12 | 0 |
| இரத்தினமுகம்மது காரணச்சரித்திரம் | 0 | 8 | 0 |
| நசீகத்துல் இசுலாம் ஹனுபியா | 0 | 6 | 0 |
| மேற்படி ஷாப்பியா | 0 | 8 | 0 |
| மெய்ஞ்ஞானரத்தின அலங்காரக்கீர்த்தனை | 1 | 0 | 0 |
| இறவுசுல்கூல் படைப்போர் வசனம் | 2 | 2 | 0 |
| றசூல்மாலை மீருன்மாலை | 0 | 6 | 0 |
| சைதத்துபடைப்போர் | 0 | 6 | 0 |
| காசீம்புலவர் திருப்புகழ் | 0 | 6 | 0 |
| பயஹாம்பரவதாரப் பலவண்ணச்சிந்து | 0 | 8 | 0 |
| நவிஅவதார அம்மானை | 0 | 2 | 0 |
| பாமாளிகை பதம் 2 பாகமும் | 0 | 8 | 0 |
| திருமுடிபிறக்கிய ஹதீது | 0 | 2 | 0 |


**T. கோவிந்தசாமி நாயுடு,**

இ. பா. கா. புக்ஷாப், புதுமண்டபம்,

மதுரை.